# பட்டமளிப்புவிழா பத்திரிக்கை செய்தி

காரைக்காலில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் 3வது பட்டமளிப்பு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் புதுவை மாநில மாண்புமிகு முதலமைச்சர் திரு. V. நாராயணசாமி அவர்கள், புதுவை மாநில மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. R. கமலக்கண்ணன் அவர்கள், புதுவை மாநில நிரவி திருமலைராயன் பட்டினத்தின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. கீதாஆனந்தன் அவர்கள், காரை மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன் அவர்கள், உயர் மற்றும் தொழிற்நுட்ப கல்வித்துறை இயக்குநர் திரு. யாசம் லட்சுமி நாராயண ரெட்டி அவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். இவ்விழாவில் சுமார் 400–க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பட்டம் பெற்றனர். புதுவை மாநில மாண்புமிகு முதலமைச்சர் திரு. V. நாராயணசாமி அவர்கள் பேசுகையில் பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயின்று பட்டதாரிகளாக தங்களை மேம்படுத்திக் கொண்டது போல் வருங்கால மாணவர்களுக்கும், சமுதாயத்திற்கும், நம் தேசத்துக்கும் சிறந்த எடுத்தக்காட்டாக விளங்கவேண்டும் என்றும், பட்டதாரி மாணவர்கள் தங்கள் பெற்றோர்கள், கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் மற்றும் நம் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியவர்களிடத்தில் மிகவும் மரியாதையோடும், நன்றியோடும், ஒழக்கசீலர்களாகவும் விளங்கி தம் பயின்ற இக்கல்லூரிக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று கூறி வாழத்துரை வழங்கினார். புதுச்சேரி மாநிலம் கல்வியில் அகில இந்திய அளவில் 5வது இடம் வகிக்கிறது, புதுவையை மிகச்சிறந்த கல்வி கேந்திரமாக விளங்குகிறது என்று கூறினார். புதுவை மாநிலத்திற்கென்று தனி தொழிற்பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது, மிக விரைவில் துவங்கப்பட்டு அதிக அளவில் மாணவர்களுக்கு வேலைவாய்பை பெருக்க உள்ளது. இக்கல்லூரிக்கென்று தனி இடம் ஒதுக்கப்பட்டு நிலம் ஆர்ஜிதப்படுத்தப்படும் வேலைகள் முடியும் தருவாயில் உள்ளது என்றும். மிக விரைவில் இக்கல்லூரிக்கென்று தனியாக அலுவலக கட்டிடங்கள், வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக்கூடங்கள் ரூசா நிதியிலிருந்து கட்டிதரப்படவுள்ளது என்று கூறினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. R. கமலக்கண்ணன் அவர்கள் பேசுகையில் எங்களது அரசாங்கம் மாணவர்களுக்கு எல்லாவழிகளிலும் உதவி வருகிறது, அவற்றை மாணவர்கள் நல்ல வழிகளில் பயன்படுத்தி தங்கள் படிப்பினை சிறந்த முறையில் முடித்து தங்கள் குடும்பத்தையும், சமுதாயத்தையும், முன்னேற்ற பாதையில் எடுத்துச்சென்று சமுதாயத்தில் தலைசிறந்து விளங்கவேண்டும் என்று வாழத்தினார். மேலும் வேலைவாய்புகளில் ஆங்கில மொழியையே அதிகமாக பயன்படுத்தப்படுவதாலும், ஆங்கில வழி கல்வி என்பதாலும் பாடங்களை மாணவர்களுக்கு ஆங்கில மொழியிலேயே கற்பிக்கவேண்டும் என்றும், மாணவர்கள் வளாக நேர்கானல் மூலம் தெரிவு செய்யப்பட்டு வேலை வாய்ப்பை பெருக்க ஆசிரியர்கள் பாடுபடவேண்டும் என்றும், ஆசிரியர்கள் ஆராய்ச்சிமூலம் தங்களை மேம்படுத்திகொள்வது மட்டுமல்லாது, கல்லூரியின் தரத்தையும் உயர்த்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் மாணவர்கள், மாணவியர்கள், ஆய்வக ஊழியர்கள், மற்றும் அலுவலக ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

முதல்வர்